TNTP160007822026

Presented on : 21-04-2026
Registered on : 21-04-2026
Decided on : 19-06-2026
Duration : 0 years, 1 months, 28 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.**

முன்னிலை : திரு.சு.அருணாச்சலம், B.E, L.L.B.(Hons),
நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.85/2026**
**CNR.No. TNTP16-000782-2026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், திருவெறும்பூர் காவல் நிலையம். குற்ற எண்.32/2026 |
| | | –எதிர்– |
| எதிரியின் பெயரும், விலாசமும் | : | பிரேம்குமார் த.பெ.சின்னதுரை வயது 38/26, எண்.7/31, மாரியம்மன் கோவில் தெரு, திருமணமேடு, இலால்குடி தாலுகா, திருச்சி மாவட்டம் |
| எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | | சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானங்களை விற்பனை செய்வதற்காக வைத்திருத்தல் என்பது பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் தண்டிக்கத்தக்கது. |
| எதிரியின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |

| | | |
|---|---|---|
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | எதிரி பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | இறுதியாக, எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு 21.04.2026–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I திருமதி.ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சிலம்பரசன், திரு.S.மோகன்குமார், திரு.M.கந்தசாமி பாண்டியன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

1) அரசு தரப்பு வழக்கானது, கடந்த 24.01.2026 ம் தேதி 08.30 மணியளவில் இலால்குடி உள்கோட்ட காவல் சரக பகுதியில் கண்காணித்தபோது எதிரி பிரேம்குமார் என்பவர் அவரது வீட்டின் அருகே அரசு அனுமதியின்றி அரசு மதுபாட்டில்களான சுமார் 180ML அளவுள்ள old

chef Brandy–26 பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் திருவெறும்பூர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.85/2026 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 230–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரியின் மீது 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூற எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினார். எனவே, அரசு தரப்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :</u>**

4.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 24.01.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் தானும், தலைமை காவலர் 1240

சண்முகசுந்தரம் என்பவருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பிரேம்குமார் த/பெ. சின்னதுரை, முத்தியூர், திருமணமேடு, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், தங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார் என்றும், அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார் என்றும், பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் தங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை காலை 08.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், சண்முகசுந்தரம் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து தங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 09.00 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார் என்றும், அந்த அழித்தல் மகஜரில் தானும், சண்முகசுந்தரம் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் பின்பு எதிரியுடன் காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 32/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ்

வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 24.01.2026ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் தானும், தலைமை காவலர் 501 ராமன் என்பவருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பிரேம்குமார் த/பெ. சின்னதுரை, முத்தியூர், திருமணமேடு, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், தங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார் என்றும், அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார் என்றும், பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் தங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை காலை 08.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், தலைமை காவலர் 501 ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து தங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 09.00 மணியளவில் 26 மதுபான

பாட்டில்களை கொட்டி அழித்தார் என்றும், அந்த அழித்தல் மகஜரில் தானும், தலைமை காவலர் 501 ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும், அந்த அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பின்பு எதிரியுடன் காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 32/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.3) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 24.01.2026 ம் தேதி தான் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் நிலைய பொறுப்பில் இருந்த போது காவல் ஆய்வாளரின் உத்தவின் படி, தலைமை காவலர் 501 ராமன், முதல் நிலை காவலர் 1240 சண்முக சுந்தரம் ஆகியோருடன் மது வேட்டை ரோந்து அலுவலாக இலால்குடி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தோம் என்றும், தனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பிரேம்குமார் த/பெ, சின்னதுரை மாரியம்மன் கோவில் தெரு, 7/31, திருமண மேடு, லால்குடி தாலுக்கா, திருச்சி என்பவர் வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுள்ள Old chef Brandy–26 பாட்டில்கள் வைத்திருந்தவர் போலீசாரை கண்டதும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரிக்க அரசு மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லரையில் விற்பனை செய்ய தன் வசம் வைத்திருந்தவரை குற்ற காரணம் கூறி 08.30 மணிக்கு கைது செய்தேன் என்றும், பின்பு எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்துகளை பொது மக்கள் யாரும் சாட்சியாக வராததால் தன்னுடன் வந்த போலீசார் முன்னிலையில் 08.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம்

கையொப்பம் பெற்றேன் என்றும், பின்னர் மேல் அதிகரிகளின் உத்தரவுப்படி கைப்பற்றப்பட்ட மதுபானத்தை சம்பவ இடத்திலேயே 09.00 மணி அளவில் அழித்தல் மகஜர் மூலம் கீழே கொட்டி அழிக்கப்பட்டு, அந்த மகஜர்களில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்பு எதிரியுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு எதிரி மீது வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, பின்னர் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன் என்றும், பட்டிகள் சாட்சிகளான 1, 2 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)—ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரி மீதான 4(1)(C) TNP Amendment Act ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது தான்.

**தீர்வு:—**

7) இவ்வழக்கின் கோப்புகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள், அ.சா.ஆ.1

முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8) இதற்கு மாறாக எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் காவல் துறையை சார்ந்தவர்கள் என்றும், எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுப்பட்டதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பதால், எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

9) இந்த வழக்கை பொறுத்தவரையில், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் காவல் துறையை சார்ந்தவர்கள் ஆவார்கள். சாட்சிகள் காவல் துறையை சார்ந்தவர்கள் என்பதாலேயே ஏற்றுக்கொள்ள கூடிய காரணங்கள் எதுவும் இன்றி அவர்களின் சாட்சியங்களை நிராகரித்துவிட முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) சாட்சிகள் காவல் துறையை சேர்ந்த சாட்சிகள் என்பதால் அவர்களின் சாட்சியத்தினை மிகுந்த கவனத்துடன் ஆராய வேண்டி உள்ளது.

11) இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், கடந்த 24.01.2026 ம் தேதி அ.சா.3 டன், அ.சா.1 மற்றும் அ.சா.2 மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பிரேம்குமார் த/பெ. சின்னதுரை, முத்தியூர்,

திருமணமேடு, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், தங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து அ.சா.3 விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார் என்றும், அவரை அ.சா.3 காலை 08.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார் என்றும், பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை காலை 08.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் இட்டதாகவும், பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் அ.சா.3 காலை 09.00 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்ததகாக சாட்சியமளித்துள்ளனர்.

12) அ.சா.1 முதல் அ.சா.3 தங்கள் சாட்சியத்தில், எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றியபோது தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் அ.சா.1 மற்றும் அ.சா.2 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளனர். ஆனால் தனி நபர் சாட்சிகளிடம் கையொப்பம் பெற மேற்கொண்ட முயற்சிகள் குறித்து அவர்கள் எந்த ஒரு சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் தங்களது முதல் விசாரணையில், எதிரியிடமிருந்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டபோது பொது மக்கள்

யாரும் சாட்சியாக முன் வரவில்லை என சாட்சியமளித்திருப்பதிலிருந்து எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றியபோது பொது மக்கள் அந்த இடத்தில் இருந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. எனவே, பொது மக்கள் இருந்த ஒரு பகுதியில் மது பாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த எதிரியை மூன்று போலிசாரும் கைது செய்து விசாரித்து அவரிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றி தயார் செய்த மகஜரில் ஒரு தனி நபர் கூட கையொப்பமிடவில்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், சாட்சி கையொப்பமிட அழைத்த பொது மக்களின் பெயர் முகவரி போன்ற எந்த விவரங்களையும் அ.சா.1 முதல் அ.சா.3 தங்களது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை. மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றும் போது தனி நபர் சாட்சிகள் யாரும் கையொப்பமிட முன் வரவில்லை என சாட்சியம் அளித்திருப்பது நம்ப தகுந்ததாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த சந்தேகம் இவ்வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் மது பாட்டில்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா அல்லது அவை வழக்கிற்காக புனையப்பட்டதா என்கின்ற சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது. மேலும், இந்த வழக்கில் போலிசாரின் சாட்சியங்கள் நம்ப தகுந்த வகையில் இல்லாதது வழக்கின் அடிப்படை ஆவணமான கைப்பற்றுதல் மகஜர் உண்மையிலேயே சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டதா என்பது குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

13) மேலும் இந்த வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக

சொல்லப்படும் மது பாட்டில்களை சம்பவ இடத்திலேயே வைத்து கொட்டி அழித்ததாக சாட்சிகள் சாட்சியமளித்துள்ள போதிலும் அந்த மதுவை கொட்டி அழித்ததற்கான புகைப்படங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை. மேலும் ஏன் மதுபான பாட்டில்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறித்து எந்த ஒரு விளக்கமும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் மதுபாட்டில்கள் ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறித்து அரசு தரப்பில் போதிய விளக்கம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் நம்ப தகுந்த வகையில் இல்லாத காரணத்தினாலும், எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் மது பாட்டில்கள் ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்பது குறித்து அரசு தரப்பில் போதிய விளக்கம் அளிக்காத காரணத்தினாலும் ஏற்படுகின்ற சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்ட நபரை பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன்

திங்கள் 19–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.19 11:26:42 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

**<u>அனுபந்தம்</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | ராமன் |
| அ.சா.2 | சண்முகசுந்திரம் |
| அ.சா.3 | தனலட்சுமி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

**<u>Judicial Form No.68</u>**

| S.No of the exhibit | Description of the exhibit and its date | Date,When the exhibit was filed in the case | How marked | By Whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 08.06.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | கைப்பற்றுதல் மகஜர் | 08.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.1 | அசல் |
| 3. | அழித்ததல் மகஜரிலுள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 08.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.1 | அசல் |
| 4. | அழித்தல் மகஜர் | 08.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.1 | அசல் |
| 5. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.2 ன் கையொப்பம் | 08.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.2 | அசல் |
| 6. | அழித்ததல் மகஜரிலுள்ள | 08.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.2 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அ.சா.2 ன் கையொப்பம் | | | | |
| 7. | முதல் தகவல் அறிக்கை | 17.06.26 | அ.சா.ஆ.7 | அ.சா.3 | அசல் |

**<u>சான்று பொருட்கள்:–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்:–</u>** இல்லை

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.19 11:26:23 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

**<u>குறிப்பு:–</u>**

1. வழக்கின் முடிவு காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் எதிரி மீது 4(1)(C) TNP Amendment ACT ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.19 11:26:28 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.